# புறநானூற்றுப் புதையல்!

**புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றைப் படக்கதையாக முனைவர் இ.ஜெ. சுந்தர் அவர்களும், ஓவியர் மு. ஷேக் அவர்களும் இணைந்து படைத்தளிக் கின்றனர். இத்தொடர் வாசகர்களுக்கான சங்க இலக்கிய விருந்து!**




ஆய் கொடுத்துப் பழக்கப்பட்டவர், வாங்கிப்பழக்கப்பட்டவர் அல்லர். பெறற்கரிய இந்த ஆடையை ஆலமரத்தின் கீழ் இருந்த சிவபெருமானுக்குத் தானமாக வழங்கினார்.
ஒருவர்:
வள்ளல்கள் மனிதர்களுக்குதான் தானம் கொடுப்பார்கள். ஆய் இறைவனுக்கே தானம் வழங்குகிறாரே.
3


உறையூரிலிருந்து புகழ்பெற்ற புலவர் ஏணிச்சேரி முடமோசியார் ஆய் அண்டிரனைக் காண வந்தார். அவர் பாடல் கேட்டு ஆய் பொன்னும், மணியும், யானையும் பரிசாக வழங்கியதுடன் தம்முடன் தேரில் அவரைத் தம் மலைவளம் காண காட்டுக்கு அழைத்துச் சென்றார். அங்கு கூட்டமாக யானைகளைக் கண்டார் புலவர்
4


மோசியார்:
இத்தனை யானைகளா? ஆய் அண்டிரனின் மலைவளத்தைப் பாடியதால்தான் இந்தக் காடு இத்தனை யானைகளைப் பரிசாகப் பெற்றதோ?
மோசியார்: நீ பரிசு கொடுக்கும் யானைகளை எண்ணினால் உன்னிடம் தோற்றோடிய கொங்கர் படையினர் எறிந்துசென்ற வேலைவிட மிகுதியாக உள்ளதே. உன் நாட்டுப் பெண் யானை ஒரு கருப்பத்தில் 10 கன்றுகள் ஈனுமோ?
5


அனைத்து யானைகளையும், அணிகளையும் பரிசிலர்க்கு வழங்கி வெறுமையாகியது அவர் அரண்மனை. 100 யானைகள் நின்ற லாயம் காலியாகியது.
புலவர்: பொருளைச் சேமித்துவைத்து என்ன பயன்? அழியப்போவது! எனவே இதை அறிந்து தன்னிடம் வருவோருக்கு வாரி வழங்கிப் புகழ் சேர்க்கிறான் ஆய்.
முதறிஞர்: ஆய் கெட்டிக்காரன். இங்கு நன்கு வாழ்வதோடு மேலுலகத்திலும் இன்பம் கிடைக்கவேண்டுமென்று அவன் அறம் செய்கிறான். வருங்காலத்தைத் திட்டமிடும் புத்திசாலி.
6


**மோசியார்**: இருவரும் ஆயைத் தவறாக எடைபோட்டு விட்டீர்கள். இது செய்தால் அது கிடைக்கும் என்பது வணிகம். மேலுலகம் என்று ஒன்று இல்லையாயினும் அவன் அறம் செய்வான். சான்றோர் சென்ற நெறியில் நடக்கும் இவனைப் பயன் எதிர்நோக்கும் அறவிலை வணிகனாகப் பார்க்காதீர்கள்.
7


அவனை நன்றாகப் புரிந்தவன் நான். அவனைப்பற்றி நான் பாடும் இந்தப் பாடலே அவனுக்கு உண்மையான புகழ்சேர்க்கும்.
முற்றும்
8
'இம்மை செய்வது மறுமைக்கு ஆம்' எனும்
அறவிலை வணிகன் ஆஅய் அலன்;
பிறரும் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன் கைவண் மையே. ( புறம்: 134)